RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1341

# புறநானூற்றினை முன்னிறுத்தி மன்னர்களின் ஈகைக் கோட்பாடு

**தெ. அகிலா [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி- 620018, தமிழ்நாடு, இந்தியா.

# The Doctrine of the King's Charity based on the Purananooru

**D. Akila [a, *]**

[a] Department of Tamil, Cauvery College for Women (Autonomous), Tiruchirappalli- 620018, Tamil Nadu, India

* Corresponding Author: akila.tamil@cauverycollege.ac.in

Received: 23-06-2022
Revised: 09-09-2022
Accepted: 17-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

Scholars call a theory a concept (ideology). The theory is the nature of the principle. The principle that we have accepted in practical life. Its standard of living is that of one for one. Therefore, it is said that chastity is the life in which only a man and a woman live together through the ritual of marriage, which is a social event. Thus, principles are formed by the clarity of thought of each principle, by acceptance, and by the social standpoint. Wikipedia lists 21 categories as theoretical categories. Among the distinct theories of Tamil, there are four theories, namely: 1. The Theory of Consciousness, 2. The Theory of Equality, 3. The Theory of Proposition, and 4. The Theory of Epistemology. One of them is the fly theory. One of them is the doctrine of charity. Charity is a small help that is unexpectedly given to the poor in return. The people of the Sangam age believed that the only way the poor could accumulate wealth was to satisfy their hunger. Charity is different from a gift because it is an endowment. All other gifts have a tendency to expect benefits. The society of the Sangam age was changing from a tribal society to a property society. In Sangam literature, it can be seen that the chieftains of small lands associated with the hunting business enjoyed providing food mixed with meat, toddy, and clothing to the Panars, Koothars, Porunars, and Viraliyars who came to them. The kings of smaller lands and chieftains considered this kind of hospitality to be great. Among them, this article examines the way in which the charity trait occurs in the Purananaooru.

**Keywords:** Sangam literature, Purananaooru, Society, Charity.

## முன்னுரை

தொல்காப்பியர் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களைக் குறிப்பிடும் போது வண்புகழ் மூவர் என்னும் அடைபுணர்த்தி உரைப்பர் (Singaravadivelan, 2005). மன்னர்கள் ஆட்சி வண்மையும் படை வண்மையும் உடையவர்களாக இருப்பது பொதுத்தன்மை என்றும் கொடையாளிகளாக இருப்பது சிறப்புத்தன்மை என்றும் குறிப்பிடுவர். தமிழக மன்னர்கள் வீரம், புகழ், மற்றும் கொடைத்தன்மையுடன் இருந்ததை வண்புகழ் மூவர் என்ற தொடர் நமக்கு இனிதுற விளக்குகிறது. வண்புகழ் என்னுந் தொடரே பின்னர் வந்த இலக்கியங்களில் விரித்துரைக்கப் பெறுகிறது.

## பெருங்கொடைகள்

பதிற்றுப்பத்தின் பதிகமான உரைநடைப் பகுதிகள் சேரவேந்தனிடம் ஒவ்வொரு புலவனும் பத்துப்பாட்டுப் பாடிய பின் பெற்ற பரிசில் யாது என்பதனை இப்பகுதிகள் எடுத்துரைக்கின்றன. இவை யாவும் பெருங்கொடைகள். நிலையான வருவாய், ஆட்சியுரிமை, அமைச்சுப்பதவி, அரசவைக்கவி, அரசன் மகன் பணியாள், துறக்கச் செலவு என்றெல்லாம் அளிக்கப்பட்டுக் காலமாற்றத்தில் கற்பனையாகக் காட்சி அளிக்கிறது. என்னும் அறிஞரின் கூற்றும் கொடைப்பண்பு பழந்தமிழரிடையே உயர்ந்ததொரு கோட்பாடாகப் போற்றப்பட்டு வந்துள்ளமையை எடுத்துரைக்கின்றது (Suba Manickam, 1975).

தமிழர்களின் அறம் சார்ந்த செயல்பாடுகளுள் ஒன்று ஈகை ஆகும். இதனைத் தமிழர்களின் தனித்த கோட்பாடுகளில் ஒன்றாகச் சங்க இலக்கிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சங்க இலக்கியங்களில் பகிர்ந்துண்ணல், கொடை, பரிசில், உணவிடல் என்ற பல நிலைகளில் சமூக வழக்கிலிருந்த ஈகை, திருக்குறள் முதலான நீதி நூல்களில் சமண, பௌத்த மதச் சொல்லாடல்களுக்கு ஒப்பப் 'பசிக்கு உணவிடல்' என்னும் பொருளில் அறியப்பெற்றது.

"அற்றார் அழி பசி தீர்த்தல்

வறியார்க்கு ஒன்று ஈவதே - ஈகை"

என்றெல்லாம், ஈகை அறம் பசி தீர்த்தல் அதுவும் வறியவனின் பசியைத் தீர்த்தல் என்ற பொருளில் வலியுறுத்தப்படுகிறது (Parimelalhagar, 2001). புகழ் என்னும் அதிகாரத்தில் ஈதலால் இசைபெறலாம் என்று ஈகையைப் புகழோடு இணைத்து ஈகையின் திறத்தினை உயர்த்துகிறார். விருந்தோம்பல் என்பது இல்லறக் கடமைகளில் ஒன்றாக வலியுறுத்துவர் வள்ளுவரின் இக்கருத்துச் செவ்விலக்கியங்களில் காணப்படும் ஈகைக் கோட்பாட்டை விளக்குவதாக உள்ளது.

கொடை என்பதற்குத் தியாகம், புறத்துறை, திருவிழா, வசவு, அடி என்றும் ஈகைக்கு - கொடை, பொன், கற்பகம் என்றும் பொருள் தருகிறது. சென்னை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியும், தமிழ் அகரமுதலி கொடை என்ற சொல்லுக்கு, ஈகம், தியாகம், கொடை, கைக்கொண்ட ஆநிரையை இரவலர்க்கு வரையாது கொடுக்கும் புறத்துறை, ஊர்த்தேவதைக்கு மூன்று நாள் செய்யும் திருவிழா, வசவு, அடி என்றும் பொருளுரைக்கிறது. ஈகைக்கும் கொடைக்கும் உள்ள வேறுபாட்டினை அறிஞர் முத்துலக்குமி தனது நூலுள் குறிப்பிடும் போது,

"வறுமையுற்றார்க்கு அவர் வேண்டுவன ஈதல்

ஈகை எனவும், தம்மை நாடி வரும் இரவலர்க்கும்,

பரிசிலர்க்கும் அவரைப் போற்றி வரையாது கொடுத்தல்

கொடை எனவும் பெறும்"

என்னும் அடிகளின் வாயிலாக சங்க காலத்தில் கொடைக்கும் ஈகைக்கும் உள்ள வேறுபாட்டை அறியமுடிகிறது (Muthukalakkumi, 1999).

## கொடை இலக்கணம்

செல்வத்துப் பயனே ஈதல் என்பதைக் காலந்தோறும் இலக்கியங்கள் இயம்பி வந்துள்ளன. செல்வத்துப் பயனே கொடுத்தலாகும் அவ்வாறின்றி யாமே அனைத்தும் நுகர்வோமென்று யாரும் இருந்து விட முடியாது என்பதை,

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஒரொக் கும்மே

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

என்னும் பாடலடிகள் இதனையுணர்த்தும். புரவலர்களும் இம்மைப் புகழ் இரப்போர்க்குக் கொடுப்பதாலும், மறுமைப் புகழ் பாடுவதாலும் கிடைக்கும் என்று நம்பினர் (Avvai Duraisamy pillai, 2010). மன்னன் வஞ்சினம் உரைக்கும் போது,

"புரப்போர் புன்கண் கூர

இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே"

என்று கூறுவதும் இந்நோக்கினையுடையதாகும் (Avvai Duraisamy pillai, 2010). என்னால் புரக்கப்படும் கேளிர் இரக்கும் அவர்களுக்குக் கொடாத வறுமையை யான் அடைவேன் என்றுரைப்பதன் மூலம் மன்னர்களின் இம்மைப் புகழ் விரும்பியமை பெறப்படுகிறது.

## புறநானூற்றில் ஈகை

ஈவோர் இரப்போர் இலக்கணம், கொடுத்தலின் உயர்வு, வறுமையிலும் செம்மை, முகமறிந்து நல்கல், இரத்தல் இழிவு முதலான பல விழுமியங்களை உள்ளடக்கியதாக கொடை என்னும் விழுமியம் அமைகின்றது. புறநானூற்றில் காணப்படும் விழுமியங்களை மன்னர்களின் விழுமியங்கள், புலவர்களின் விழுமியங்கள் மற்றும் போர்மறவரின் விழுமியங்கள் என்னும் அடிப்படையில் பாகுபடுத்தற்கியலும். இக்கட்டுரை மன்னர்களின் ஈகைக் கோட்பாடு குறித்து விளக்குகிறது.

## மன்னரின் ஈகைத் திறன்

சங்ககால மன்னர்கள், வள்ளல்கள் முதலானவர்களின் கொடைத்திறத்தினை நோக்கின் கொடை என்னும் விழுமியம் மன்னர்கள், வள்ளல்களின் வாழ்வில் நீக்க இயலாத பண்பாக அமைந்திருத்தலைக் காண்கின்றோம்.

## தலைநாள் விருப்பினன்

"ஒருநாட் செல்லலாம் பலநாட் செல்லலாம்

பலநாள் பயின்று பலரோடு செல்லினும்

தலைநாட் போன்றே விருப்பினன் மாதோ"

என்று ஔவையார், அதியனைக் குறித்துப் பாடும்போது மன்னனின் விருந்தோம்பல் பண்பினைக் காண்கின்றோம் (Avvai Duraisamy pillai, 2010). இது போன்ற கருத்தினைக் காரிக்கிழாரும்,

"இன்று செலினுந் தருமே சிறுவரை

நின்று செலினுந் தருமே பின்னும்

முன்னே தந்தனன் என்னாது உன்னி

வைகலும் செலினும் பொய்யலன் ஆகி

யாம் வேண்டி யாங்குளம் வறுங்கல நிறைப்போன்"

என்று பிட்டங்கொற்றனைக் குறித்துப் பாடுவர் (Avvai Duraisamy pillai, 2010).

## கைம்மாறு கருதாக் கொடை

உலகத்துச் செல்வர் பலரும் தம்பால் உள்ள செல்வத்தைப் பரிசிலர்க்கு வழங்குதல் இம்மையிற் புகழும் மறுமையிற் துறக்க இன்பம் குறித்தது ஆகும். இல்லோர்க்கு வேண்டுவன நல்கி அவர்களையும் தம்மால் உலகியலில் நுகர்வன எல்லாவற்றையும் நுகர்வித்தல் உடையோர்க்குக் கடனாகும் என்ற உயர் விழுமியத்தைக் கடைபிடிப்பவன் ஆய்அண்டிரன் என்றுரைப்பர் முடமோசியார்.

"இம்மை செய்தது மறுமைக்கு ஆமெனும்

அறவிலை வாணிகன் ஆய்அலன்"

என்னுமடிகள் இதனை வலியுறுத்தும் (Avvai Duraisamy pillai, 2010).

## பசிப்பிணி மருத்துவன்

கிள்ளிவளவன் யான் வாழும் நாளினையும் சேர்த்துப் பண்ணன் வாழ்வானாக என்று பாடுவதற்கு, பண்ணன் வருவோர் பசித்துன்பம் காப்பது காரணமாக அமைகின்றது. பசி என்னும் நோய் மிகக் கொடிது அது வறுமையில் உள்ளவரை மிகவும் துன்புறுத்தும். அப்பசித்துன்பத்தைக் களைபவனாகப் பண்ணன் திகழ்கின்றான். "அவன் மனையில் இடையறாது ஊன் உண்பார் ஒலி கேட்கின்றது. எறும்பின் வரிசை போல இளஞ்சிறார்கள் சோறுடைக் கையராகச் சுற்றித் திரிகின்றனர்". இதனைக் கண்ணுற்ற புலவர் அவனது பரிசினைப் பெற்றுத் திரும்புவோரிடத்துப், "பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே" என்று வினவுவார். இதனால் மன்னனின் சமூக விழுமிய உணர்வினை உணர்கின்றோம். பிறிதோரிடத்தில் ஈர்ந்தூர் கிழாரினை மதுரைக் குமரனார் பாடும்போது,

"நிரப்பாது கொடுக்குஞ் செல்வமும் இலனே

இல்லென மறுக்குஞ் சிறுமையும் இலனே

ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்"

என்றுரைப்பர். பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைக் குறித்திடும் போது பாணர் சுற்றத்தின் பசிக்குப் பகைவன் என்னும் பொருளில் 'பைதற் சுற்றத்தின் பசிக்குப் பகையாகி' என்று பாடுவர் (Avvai Duraisamy pillai, 2010). மன்னர்கள் வருவோர் பசித்துன்பத்திற்கு முக்கியத்துவமளித்து பேணுதலால் அவர்கள் அடைச்சிறப்பு பெற்றிருந்தமை புலனாகிறது.

## பொருளற்ற நிலையிலும் அருளும் பண்பு

பொருளில்லா நிலையிலும் வள்ளன்மை குன்றா மாண்பினை உடையவராக வள்ளல்கள் திகழ்ந்துள்ளனர் என்பதைக்

"கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்

காணியசென்ற விரவன் மாக்கள்

களிறோடு நெடுந்தேர் வேண்டினுங் கடவன்"

என்னும் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன (Avvai Duraisamy pillai, 2010).

## இரந்து நிற்போருக்கு எளியனாயிருத்தல்

மன்னர் வீரத்தினை எடுத்துரைக்கும் போது புலவர்கள் இரந்து நின்றால் நாடுகளைப் பரிசாகத் தருகுவர் என்றுரைத்தலால், இரப்போர்க்கு இன்னது என்றில்லாமல் பரிசுகளை அள்ளித்தரும் கொடைமடத்தினைக் காண்கின்றோம். இரவலர் கேட்டால் நாட்டையும் தருகுவன் பாரி, ஆதலின், பகைவர்களே உங்கள் உரிமை மகளிர் நீங்கள் விறலியராகவும் பரிசிலராகவும் வாருங்கள் (109). என்று புலவர் பாடுவதும்,

"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி

ஈயென இரக்குவர் ஆயிற் சீருடை

முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்

இன்னுயிர் ஆயினுங் கொடுக்குவன்”

என்று சோழன் நலங்கிள்ளி உரைப்பதும் இச்சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடும்போது இழைபெற்ற விறலியர் தலையிற் சூடிக்கொள்ளும் பூவிற்கு விலையாக மாடமதுரையைப் பரிசாகத் தருவான் என்றுரைப்பதும் இரவலர்க்கு மன்னன் எளியனாய் இருத்தலை விளக்குவன என்பதையும் உணர முடிகிறது. (Avvai Duraisamy pillai, 2010).

## பாசறையில் கொடை

பாசறை இருப்பினில் தம்மை வாழ்த்தும் பாணர்களுக்கு பரிசில் வழங்கும் மன்னர் அருட்திறத்தினைக் காண்கின்றோம்.

“ஊன் சோற்றமலை பாண்கடும்பு அருத்தும்

செம்மல் அம்மநின் வெம்முனை இருக்கை”

என்னும் அடிகள் சான்றாகின்றன (Avvai Duraisamy pillai, 2010).

## பகைநாட்டு இரவலர் வருகை

சோழன் கிள்ளிவளவனைப் பகை நாட்டில் உள்ள இரவலர்கள் தேடி வந்து பரிசினைப் பெற்றுச் செல்வார் என்று ஆவூர் மூலங்கிழார் புகழ்ந்துரைக்கின்றார். இதன்மூலம் செல்வமுடையோர் வறியோர்க்கு வழங்குதலும் வறியோர் செல்வம் உடையோரைச் சென்று இரத்தலும் இயற்கை என்பதை உணர்ந்த மன்னனைப் பகைநாட்டு இரவலர்களும் தேடிவருபவனாக விளங்குவதில் கிள்ளிவளவனின் விழுமியத்தை உணர்கின்றோம்.

## முடிவுரை

வள்ளல்கள், மன்னர்கள் அளித்த கொடை யாவும் கைம்மாறு கருதாக் கொடைகளாகும். பாணர்களின் பசிப்பிணி போக்கும் மருத்துவர்களாய் சங்க கால வள்ளல்கள் திகழ்ந்தனர். எத்தனை முறை இரந்தாலும் முகம் சுளியாத தலைநாள் விருப்பினை உடையவர்களாய் விளங்கினர். காட்டிடையே பொருளற்ற நிலையிலும் மேலும் தன்னை யாசிக்கும் வறுமையுற்றோருக்கு அருளும் பண்பு உடையராய்த் திகழ்தலையும் காணமுடிகிறது. போர் முனையில் இருக்கும் போது பாசறையில் கொடை கொடுப்பதைப் பீடுடைய செயல் எனக் கருதினர் மன்னர்கள் பகை நாட்டு மக்களுக்கும் ஈகை செய்யும் மனப்பாங்கு உடையோராய் விளங்கியதையும் இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

## References


Avvai Duraisamy Pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Suba Manickam, V. (1975) Sinthanaikalangal, Pathitrupathu kodai, Tamilman Pathippagam, Chennai, India.

Muthukalakkumi, (1999) Pandaiya Tamil Ilakkiyangalil Aranerigal, Anitha Pathippagam, Trichy, India

Parimelalhagar, (2001) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Singaravadivelan, Ara., (2005) Tholkappiyam, Koviloor madalayam, Koviloor, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License